பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 27 | வியாழக்கிழமை | 14.12.2023 | அதிர்வு 135

## யாழில் கஞ்சாவுடன் நேற்று இருவர் கைது

### வாகனமும் பறிமுதல்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி, சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று 7 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளது 03

### 41 மேலதிக வாக்குகளால்



# ‘பட்ஜட்” வெற்றி

## தொடர்ந்து அதிரடி காட்டும் ரணில்

(ஏ.ஜே.சார்ள்ஸ்)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் 06

# சிறிதரன், சுமந்திரன், சாணக்கியன் ‘பட்ஜட்’டுக்கு எதிராகவே வாக்களிப்பு

## கூட்டமைப்பின் ஏனைய எம்.பிக்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை



(ஏ.ஜே.சார்ள்ஸ்)

வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு நேற்று நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகிய மூன்று எம்.பிக்களும் எதிர்த்து வாக்களித்தனர். கூட்டமைப்பின் ஏனைய 7 எம்.பிக்களும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. 05

## லசந்த, பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் படுகொலைகளுக்கு நீதியைப் பெற்றுத் தருக!

### நாடாளுமன்றில் சஜித் வலியுறுத்து



காலனித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதைப் போன்று லசந்த விக்கிரமதுங்க, ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ், தியாகராஜா மகேஸ்வரன் ஆகியோரின் 06

## காரைநகர் கடலில் இந்திய மீனவர்கள் அறுவர் சிக்கினர்!

(ந.லோகதயாளன்)

எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்கள் நேற்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், காரைநகர் 06

## ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நேற்றே சான்றுரைப்படுத்திய சபாநாயகர்



நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

அத்துடன் கடந்த 05




ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவர் ஓர் அற்புதமான மனிதர். புத்திஜீவி. பகுத்தறிவு வாதி. அதே நேரம் பன்மொழி தங்கள் குறித்தும் ஆழமான அறிவு கொண்டவர். ஆரம்பத்தில் இடதுசாரி மார்க்ஸிஸவாதி. அதைக் கரைத்துக் குடித்தவர். எனினும் அதைப் பற்றி நிற்காமல், தமிழ்த் தேசியத்தின் நிலை நிறுத்தலுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். ஆழமாக வாசிப்பார். ஒரு வகையில் 06

# நில்வலா, குடா கங்கைகளின் நீர்மட்டம் உயர்வடைகின்றது

## நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை



பலத்த மழையால் நில்வலா கங்கை மற்றும் களு கங்கையின் கிளை ஆறான குடா கங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் தொடர்ச்சியாக உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அந்த ஆறுகளை அண்மித்து வாழும் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, வெள்ளத்தினால் தெற்கு அதிவேக வீதியின் கொக்மாதுவ இடைமாறலின் வெலிகம முதல் கனங்கே வரையான பகுதியில் இலகுரக வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதனிடையே, சப்ரகமுவ, மேல் மாகாணங்கள் மற்றும் கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை மாவட்டங்களில் 75 மில்லிமீட்டர் வரையான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள் மற்றும் மாத்தறை, பொலன்னறுவை மாவட்டங்களில் இடைக்கிடையே மழை பெய்யும் என திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனிடையே, நுவரெலியா, பதுளை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

# கஞ்சன விஜேசேகரவின் சவாலை ஏற்றுக்கொண்டார் அனுரகுமார!



மின்சக்திதுறைகொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பில் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று முன்தினம் விடுத்த சவாலுக்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க பதிலளித்துள்ளார்.

அமைச்சரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கு தமது கட்சி தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மின்சார சபை, எண்ணெய் ஒப்பந்தங்கள், நிலக்கரி ஒப்பந்தங்கள், சூரியசக்தி ஒப்பந்தங்கள் தொடர்பான விவாதத்திற்குத் தாம் தயார் என்பதை நினைவூட்டுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் கஞ்சன விஜேசேகர, அனுரகுமார திசாநாயக்க தயாரெனில் தாம் பகிரங்க விவாதத்திற்காக தனியார் தொலைக்காட்சிக்கு வருகை தரத் தயார் என்று குறிப்பிட்டார்.

# வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரிப்பு!



நாடளாவிய ரீதியிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்கள், வர்த்தக நிலையங்களில் வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்துள்ளது.

தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் வெங்காயம் 400 ரூபா முதல் 470 ரூபா வரை மொத்த விலையில் நேற்று விற்பனை செய்யப்பட்டுள்ளது.

வெங்காயம் இறக்குமதிக்கு இந்தியா கட்டுப்பாடுகளை விதித்துள்ளதையடுத்து, விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய பகுதிகளிலும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 400 ரூபாவிற்கும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனிடையே, மாத்தளை நகரிலும் வெங்காயம், முட்டையின் விலை அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்

உள்நாட்டு சந்தைக்கு பாரிய அளவில் பெரிய வெங்காயத்தை வழங்கிய விவசாயிகள் பலர் விளைச்சலுக்குரிய விலை கிடைக்காமை, உரிய நேரத்தில் உரம், கிருமிநாசினி கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களினால் தற்போது பெரிய வெங்காய உற்பத்தியிலிருந்து விலகியுள்ளனர்.

## யாழில் கஞ்சாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டன் அவர்கள் பயணித்த வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.









கிளிநொச்சி பகுதியில் இருந்து கேரள கஞ்சாவைக் கடத்தி வருகின்றனர் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரிப் பகுதியில் பொலிஸாருடன் இராணுவப் புலனாய்வாளர்களும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த வாகனத்தை மறித்துச் சோதனையிட்டபோதே வாகனத்தில் இருந்து 7 கிலோகிராம் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

அதையடுத்து, வாகனத்தில் பயணித்த இருவரையும் கைது செய்த பொலிஸார், கைது செய்யப்பட்டவர்களையும், வாகனம் மற்றும் கஞ்சாவையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.



# தலைமன்னார் இறங்குதுறையின் அபிவிருத்தி முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் நடக்கும்!

## அதற்கான விண்ணப்பங்களைக் கோரத் தீர்மானம்



தலைமன்னார் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்தது.

மன்னார் மற்றும் இராமேஸ்வரத்திற்கு இடையில் பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் வகையில், இந்த இறங்குதுறை விரைவாக அபிவிருத்தி செய்யப்படும் என அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

அண்மையில் மன்னார் இறங்குதுறையை சூழவுள்ள பகுதியை துறைமுகமாக மேம்படுத்தும் வகையில், வர்த்தமானி வெளியிடப்பட்டது.

முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்படும் முன்மொழிவுகளை கவனத்தில் கொண்டு பொருத்தமான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான அறிக்கையொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# வடக்கு – கிழக்கைப் பிரித்தமைக்காக ஜே.வி.பி. தமிழ் மக்களிடம் மன்னிப்பையாவது கோருமா?



## பொ. ஐங்கரநேசன் கேள்வி

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின் ஊடாகத் தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார். தங்கள் மரபுவழித் தாயகமான இணைந்த வடக்கு – கிழக்கை நீதிமன்றப்படியேறிச் சட்ட ரீதியாகப் பிரித்தது ஜே.வி.பி. என்பதைத் தமிழினம் ஒருபோதும் மறவாது. இந்நிலையில், தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு கோருகின்ற ஜே.வி.பி. வடக்கு – கிழக்கைப் பிரித்தமைக்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்பையுமல்லவா கோரவேண்டும். அவ்வாறு கோருமா? – என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களைத் தங்களுடன் இணையுமாறு ஜே.வி.பியின் தலைவர் கோரிக்கை விடுத்திருப்பது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 1944ஆம் ஆண்டில் கூட்டிய கொழும்புப் பிரஜைகளின் பொதுக்கூட்டத்தில் சுதந்திர இலங்கையின் அரசியல் அமைப்புக் கொண்டிருக்கவேண்டிய கோட்பாடுகள் குறித்து வலியுறுத்தியிருந்தது. அவற்றில், இனங்களுக்குச் சுயநிர்ணயம் தொடர்பாக பாரதீனப்படுத்த முடியாத உரிமை இருந்து வருகிறது என்பதை அங்கீகரிப்பதும், அவர்கள் விரும்பினால் அவர்களுக்கே உரித்தான சுயாதீன அரசுகளை உருவாக்கிக்கொள்ள முடியுமென்பதை அங்கீகரிப்பதும் ஒரு கோட்பாடாகும். ஆனால், கம்யூனிச சித்தாந்தத்தின் அடியொற்றிகளாகத் தங்களைக்கூறிக் கொள்ளும் ஜே.வி.பி. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றி இதுவரையில் தெரிவித்ததில்லை. தமிழ் மக்களைத் தங்களுடன் இணையக் கோருகின்ற ஜே.வி.பி. அவர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதாகவுமல்லவா தெரிவிக்கவேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளுமா?

தமிழ் மக்கள் தங்களுடன் இணைந்தால் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் ஜே.வி.பியின் தலைவர் கூறிவருகிறார். முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்காகக் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் என்ன தேவைகளின் பொருட்டு நீண்டநெடிய தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள் என்பது அவர் அறியாததல்ல. தேவைகளை நிறைவேற்றுவோம் என்று கூறும் ஜே.வி.பி. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தன்வசம் உள்ள தீர்வையுமல்லவா வெளிப்படுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு வெளிப்படுத்துமா?

தமிழ் மக்களின் இந்தக் கேள்விகளுக்கான தெளிவான பதில்களை ஜே.வி.பி வழங்காதவரை தமிழ்மக்களின் மனங்களை அதனால் ஒருபோதும் வெல்ல முடியாது. அதுவரை ஜே.வி.பியின் இந்த அழைப்புகள், அறிவுப்புகள் எல்லாம் ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசாநாயக்கவை வெல்ல வைப்பதற்காகத் தமிழ் வாக்குகளை நோக்கி வீசப்படும் தூண்டில்களாக மட்டுமே உணரப்படும். – என்றும் தெரிவித்துள்ளார்.

## சிறிதரன், சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“நான் சுகவீன விடுமுறையில் இருப்பதால் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. ஏனைய 6 எம்.பிக்களும் வாக்கெடுப்பில் பங்கேற்காமைக்கான காரணம் எனக்குத் தெரியாது” – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகிய எம்.பிக்கள் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. சபைக்கு வருகை தந்திருந்த போதிலும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் இரண்டாம் வாசிப்பைப் போன்று மூன்றாம் வாசிப்பையும் ஆதரித்து வாக்களித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸியும் ஆதரவாக வாக்களித்தார்.

எதிரணி சுயாதீன உறுப்பினர்களில் ஒருவரான அநுர பிரியதர்ஷன யாப்பாவும் ஆதரவாக வாக்களித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவும் ஆதரவாக வாக்களித்தார்.

அண்மையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரொஷான் ரணசிங்க, வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராகவே வாக்களித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று வாக்களிக்க நாடாளுமன்றத்துக்கு வருகை தரவில்லை.

நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மற்றும் எம்.பிக்களான சுஜித் சஞ்சய பெரேரா ,ரோஹன பண்டார ஆகியோருக்கும் நேற்று வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.




## ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

11ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் என்பவற்றையும் சபாநாயகர் நேற்று சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய, இந்தச் சட்டமூலங்கள் 2023ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சேர்பெறுமதி வரி (திருத்த) சட்டமாகவும், 2023ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிதிச் சட்டமூலமாகவும், 2023ஆம் ஆண்டின் ஆம் 34 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாகவும் நேற்று முதல் அமுலுக்கு வருகின்றன.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நடமாடும் நூலகமும் கூட. ஆங்கிலப் புலமையாளர். அதேசமயம் தத்துவார்த் தங்களைத் தமிழில் தருவதிலும் தன்னி கரில்லாதவர்.

ஆம். அந்த மனிதர் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்தான். அவரின் நினைவு தினம் இன்று. அவர் பற்றிய ஒரு சிறு நினைவு மீட்டல் இங்கு. அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கும் உண்டு என்றும் நினைக்கிறேன்.

நான் நேசித்த ஊடக உலகம் எனக்குத் தந்த பெரும் பாக்கியம் அந்த அற்புத மான மனிதரோடு நெருங்கி ஊடாடி, உணர்வுபூர்வமாகப் பழகும் வாய்ப்பு.

அவருக்கு நான் நண்பனா, சகோத ரனா, இல்லை மகனா, உற்றவனா, மாணவனா – நான் அறியேன். ஆயினும், அவர் இறக்கும் வரை இரண்டு தசாப்த காலம் மிக நெருக்கமான – நம்பிக்கைக் குரிய – உற்றவனாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியமை பேரதிர்ஷ்டம். அது, அவரது கடைசி நிமிட வாழ்வுவரைத் தொடர்ந்தது.

ஆதிசங்கரர் முதல் வாத்சாயனர் வரை எல்லோரின் ஆக்கங்கள் பற்றியும் நாம் மனம் திறந்து பேசுவோம். கருத்துப் பரிமாறுவோம். பெரும்பாலும் பேராசிரி யரான அவரின் லெக்சர்களை செவி மடுக்கும் மாணவனாக நான் இருப்பேன். அரசியலில் இருந்து உடலின் இன்பம் வரை எல்லாவை பற்றியும் உரைப்பார். ஆலோசனை வழங்குவார்.

2006க்கு முன் வரையப்பட்ட என் ஆசிரியர் தலையங்கங்கள் பலவற்றில் அவரின் உள்ளூட்டம் – கருத்துச் செறிவு – நேரடியாக ஊறியிருக்கும். தானுரைத்த கருத்தியலை அற்புத எழுத்துரையில் நான் வடித்தால் அது கண்டு மகிழும் பேருள்ளம் அவரது.

என்னை அழைத்து, விருந்தளித்து, என்னுடன் பேசினால் அந்த அற்புத மனித ரின் எண்ணப் போக்கை எடை போட லாம் என்ற கருத்தியல் கொழும்பில் மேற்குலக ராஜதந்திரிகளிடம் இருந்தது. அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது எங்கள் ஊடாட்டம்.

கடந்த ஐந்து நூற்றாண்டுகளில் சர்வ தேசத்துடன் ஊடாடும் தமிழர் தேச இராஜ தந்திரி என்ற உயரிய இடம் அவருக்கு மட்டுமே கிடைத்தது என்பேன்.

சர்வதேச இராஜதந்திரம் என்பது மிக நுட்பமான விடயம். சாணக்கியத் திறமை யோடு அது கையாளப்பட வேண்டும். அந்தத் தந்திரம் கைவரப் பெற்றவர் அவர். பல சமயங்களில் பக்கத்திலி ருந்து அவற்றைப் பார்த்து வியப்பின் எல்லைக்குச் சென்றவன் நான்.

திம்புவுக்குப் பிறகு, சர்வதேச சமூகத் துடனும் கொழும்பு அரசுடனும் புலிகள் நடத்திய பேச்சுக்கள் எல்லாவற்றுக்கும் தலைமை வகித்த தலைமை உரையாளர் அவர்தான். கொழும்பிலும், யாழ்ப்பாணத் திலும், பல்வேறு நாடுகளிலும் நடந்த இந்தப் பேச்சுக்களின் போதெல்லாம் அனேகமாக அவருக்குப் பக்கத்தில் இருந்து அவரது கருத்தியலை தமிழர் உலகுக்கு வெளிக்கொணரும் பாக்கி யம் எனக்குக் கிடைத்தது என்பதைப் பெருமிதத்துடன் நான் கூற முடியும்.

ராஜதந்திரம் என்பது எப்போதும் நிமிர்ந்து நின்று முட்டாள்தனமாக மோது வது அல்ல. தேவைப்படும் சமயங்க ளில் நாணல் போல வளைவதும், சில வேளைகளில் உருக்குச் சட்டம் போல அசையாமல் உறுதியாக நின்று அதிர்வு களைத் திடமாக எதிர்கொள்வதும் அதற் குள் அடக்கம்.

அப்படி நாணல் போல வளைந்து கொடுத்து, பக்குவமாகக் காய் நகர்த்தும் தந்திரத்தை அவரிடம் இருந்து கற்று, அதன்படி ஒழுகத் தவறியமையால்தான் தமிழர்களுக்கு இன்று இந்த நிலைமை என்பது என் கருத்து.

அவர் ஒரு தீர்க்கதரிசி. 2009 இல் நடக்கப்போவதை 2006 இல் மரணப் படுக்கையில் அட்சரம் பிசகாமல் எதிர்வு கூறியவர். அப்படியே நடந்து முடிந்தது கூட அவரின் தீர்க்கதரிசனத்தின் உறுதிப் பாடுதான்.

சிங்கள தேசத்தின் ஜனாதிபதியான பிரேமதாஸவுடன் வரலாற்றுத் தேவை கருதி தோளில் கைபோடச் சொன்னார். அவர்தான் ரணிலுடன் சமரசம் செய்தவர். அவரே யதார்த்தவாதியான மஹிந்தவை அரவணைத்தும் காரியமாற்றும் ராஜதந் திரத்தையும் செப்பினார்.

ஆனால் அவரின் ஆலோசனையை செவிமடுப்பதில் தவறிழைத்தோம்.

உள்ளக சுயநிர்ணைய உரிமை யின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வை ஒரு யோசனையாக முன்மொழிந்து, அதனை ஒஸ்லோ அறிவிப்பாக இலங்கை அரசுடன் சேர்ந்து அவர் பிரகடனப்படுத் திய போது, தலைவர் பிரபாகரனை அவ ரின் வரலாற்று இலக்கான தனித்தமி ழீத்தை அடையும் உறுதிப்பாட்டில் இருந்து விழுத்தி விட்டார் பாலசிங்கம் என்று ஆப்பு வைத்து எழுதிய பிரகிருதிகள் இன்று மாமனிதர்கள்.

ஆனால் அவர் – பாலசிங்கம் – அன்று எட்டிய ஒஸ்லோ அறிவிப்பு மட்டும்தான் இன்று நாம் பெற்ற ஒரேயொரு பெறு பேறாக மிஞ்சி நிற்கிறது.

அவரின் தீர்க்க தரிசன வழிகாட் டல்களுக்குப் பக்கத்தில் இருந்து ஆப்பு வைத்த அலப்பறைகளே ஈழத் தமிழி னத்தின் இன்றைய இழிநிலைக்குப் பொறுப்பேற்க வேண்டிய காரணர்கள் ஆவர்.

அவருக்கு 'தேசத்தின் குரல்' என்று பட்டம் அளித்தோம். ஆனால் அந்த தேசத் தின் குரலை செவிமடுக்கத் தவறினோம். அந்த அற்புதமான ஆலோசனைகளுக்கு தவறான அர்த்தங்களைக் கற்பித்து அவற்றை நிராகரித்தோம். அதுவே நம் இன்றைய நிலைமைக்கு ஒரே காரணம் என்பது என் கருத்து. இதற்கு மேல் ஒன்றும் கூறாமல் இவ்விடயங்களில் மிச்சத்தை வாசகர்களின் ஊகங்களுக்கே விட்டுவிடுகிறேன். அவர்கள் நன்கு ஊகித்து உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

## லசந்த, பரராஜசிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)
படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு நியமிக்கப் பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத் தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இந்த ஆண்டு மார்ச் 21, செப்டெம் பர் 09, ஒக்டோபர் 04, ஒக்டோபர் 18, நவம்பர் 24, நவம்பர் 30, டிசம்பர் 06 மற் றும் டிசம்பர் 08 ஆகிய திகதிகளில் இரு பத்தேழு இரண்டின் கீழ் முக்கிய பிரச் சினைகளை முன்வைத்தேன். ஆனால், இதுவரை பதில் கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டு நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் முதல் வாரத்திலாவது இந்தக் கேள்விக ளுக்கு பதிலளியுங்கள்.

காலனித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்ள மூவரடங்கிய குழுவை அமைச்ச ரவை நியமிக்கப்பட்டுள்ளதை வரவேற்கி றோம். ஹென்றி பேதிரிஸ் படுகொலை மிலேட்சத்தனமானது.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள், சண்டே லீடர் பத்திரி கையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கி ரமதுங்க, ரிச்சட் சொய்சா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ், தியாகராஜா மகேஸ்வரன் ஆகியோரின் படுகொலை மற்றும் சாகரிகா கோமஸ், பிரேம கீர்த்தி அல்விஸ் ஆகியோர் படு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகளைமேற்கொண்டுஉண்மை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

காலனித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி தொடர்பில் காட்டும் அக்கறை அண்மைக் காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் விவகாரத் திலும் செலுத்த வேண்டும்." – என் றார்.

## காரைநகர் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடற்பரப்புக்குள் ஊடுருவி எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட சமயமே கடற்படையினரால் இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்திடம் இன்று ஒப்படைக் கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## பட்ஜட் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
41 மேலதிக வாக் குகளால் நிறைவேற்றப் பட்டது.

வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றா வது வாசிப்புக்கு ஆதரவாக 122 வாக்குக ளும், எதிராக 81 வாக்குகளும் வழங்கப் பட்டன.

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் இடையே கடுமையான வாதப் பிரதிவாதங் கள் இடம்பெற்ற நிலையில் மாலை 6.40 மணியளவில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன வரவு – செலவுத் திட் டத்தை ஆதரித்து வாக்களித்ததுடன், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்த்து வாக்களித்தது. தேசிய மக்கள் சக்தியும் எதிராகவே வாக்களித்தது.

2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக் கீட்டுச் சட்டமூலம், நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் கடந்த நவம்பர் 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நவம்பர் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதங்கள் இடம்பெற்றன.

இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நவம்பர் 21ஆம் திகதி முதல் டிசம் பர் 13ஆம் திகதி (நேற்று) வரை மூன் றாம் வாசிப்பு மீதான விவாதங்கள் இடம் பெற்றன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இன்றைய தேவை: ஒரு பாலசிங்கம்

ஈழத் தமிழர்கள் தமது இன விடுதலைக்காக, கௌரவ வாழ்வுக்காக, இறுதியில் தமது இருப்புக்காக நடத்திய ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டம் இன்று எதிரியால் தோற்கடிக்கப்பட்டு விட்டது. யுத்தத்தில் வென்றவன் தன் விருப்பப்படி சரித்திரத்தை வரைகிறான். அந்தப் புனையப்பட்ட சரித்திரத்தில் உண்மை குழிதோண்டிப் புதைக்கப் படுகின்றது.

நமது இனத்தின் வரலாற்றுக் கட்டாய மாகப் பிறப்பெடுத்த ஆயுதப் போராட்டம் பல்லாயிரம் போராளிகளினதும் மக்களினதும் உயரிய ஈகத்தினாலும் தியாகத்தினாலும் கட்டமைக்கப்பட்டது. அதைக் கொச்சைப்படுத்தி, ஈனப்படுத்தும் சரித்திரமே இன்று புனையப்படுகின்றது. உண்மைகள் மறைக்கப்படுகின்றன.

ஆயுதப் போராட்டமே ஒரு 'பயங்கரவாதமாக' எப்போதும் சித்திரிக்கப்படுகின்றது. அதைத் தோற்றுவிக்கக் காரணமான அடக்குமுறை, பெரும்பாலும் வெற்றியின் மிதப்பில் இருப்பதால் அதன் கொடூரம் பற்றி யாரும் பேசுவதில்லை. விமர்சிப்பதில்லை. அந்தக் கொடூரத்தில் இருந்து மீளுவதற்கான மாற்று வழிமுறைகள் குறித்தும் கூட யாரும் உரைப்பதில்லை.

அத்தகைய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் உட்கிடைகளையும், நியாயங்களையும், அதன் பிறப்புக்குக் காலாக அமைந்த வரலாற்றுக் கட்டாயங்களையும் நியாயப்படுத்தி தெளிவுபடுத்தியவர் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

*"ஒடுக்குமுறையாளன் தனது அடக்குமுறைச் சாதனமாக ஆயுத பலாத்காரத்தையே பிரயோகிக்கிறான். இந்த அநீதியான ஆயுத பலாத்கார அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் மக்கள், ஆரம்பத்தில் அமைதி வழிப் போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் இந்த அமைதி வழி மென்முறைப் போராட்டங்களை நசுக்க ஒடுக்குமுறையாளன் ஆயுத வன்முறையை அதிதீவிரப்படுத்துகிறான். இதனால் சட்ட ரீதியான, சமாதான, ஜனநாயகப் போராட்ட முறைகளில் மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர். அதே சமயம் ஒடுக்குமுறையோ நீடிக்கிறது; சாதாரண வாழ்க்கையின் சகல பரிமாணங்களிலும் அது ஊடுருவிச் செல்கிறது. மனித உரிமைகள் இழந்த அடிமைத்தனத்திற்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். "அடக்குமுறையின் அழுத்தம் அதிகரிக்க, மக்களிடம் ஆவேசம் பிறக்கிறது. விடுதலை வேட்கை எழுகிறது. ஆயுதப் பலாத்கார அடக்குமுறையை ஆயுதம் தாங்கி எதிர்கொள்ள மக்கள் தயாராகின்றனர். இந்தப் புரட்சிகர வரலாற்றுச் சூழ்நிலையிலேயே ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கம்* **(armed resistance movement)** *ஒரு வெகுசனப் போராட்ட வடிவத்தை எடுக்கிறது. எனவே, அடக்குமுறைக்கு எதிராகச் சகல விதமான சமாதான வழி தழுவிய போர்முறைகளையும் கையாண்டு தோல்வி கண்ட மக்கள், வேறெந்த வழியுமற்ற சூழ்நிலையில், ஆயுதம் தாங்கிய புரட்சிகரப் போராட்டத்தில் குதிப்பது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகிவிடுகிறது. தமிழீழத் தேசிய சுதந்திரப் போராட்ட வரலாற்றை எடுத்துக் கொண்டால் இந்த உண்மை புலனாகும்."*

- என்று தெளிவு படுத்துகின்றார் பாலசிங்கம்.

ஜனாதிபதி பிரேமதாஸ காலத்துத் தீர்வு முயற்சி ஒன்று தொடர்பாக தத்துவாசிரியர் பாலசிங்கம் அன்று சொன்ன கருத்துகள் சில இப்போதைய தீர்வு முயற்சிகளுக்கும் கனகச்சிதமாகப் பொருந்துவது அவதானிக்கக் கூடியது.

"ஒரு வருடத்திற்கு மேலாகக் கூடிப்பேசிக் கலந்தாலோசித்து, விசாரணை செய்து, விவாதங்கள் நடத்தி, இறுதியில் தமிழரின் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் எதையுமே தொடாது, தெரிவுக் குழு கேலிக்கூத்தான ஒரு தீர்வை வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்வு தமிழ் மக்களுக்கு ஓர் உண்மையைத் தெளிவாகப் புலப்படுத்தியது. சிங்களப் பேரினவாதம் ஒருபொழுதும் தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்ற உண்மையை அது வலுப்படுத்தியது. நாமாகவே போராடி எமது உரிமையை வென்றெடுக்க வேண்டும் எனக் காலம் காலமாகப் புலிகள் இயக்கம் பிரகடனம் செய்துவந்த கூற்று, இன்று அரசியல் மெய்யுண்மையாகித் தமிழ் மக்களை ஆழமாகச் சிந்திக்க வைத்திருக்கிறது." - என்று முப்பது வருடங்களுக்கு முன்னர் பாலசிங்கம் கூறிய கருத்து, இன்றைக்கும் பொருத்தமாக இருப்பது கண்கூடு.

இன்று பாலசிங்கத்தின் 17 ஆவது ஆண்டு நினைவு தினம்.

அவர் போன்ற அரசியல் புலமையும், மொழி ஆற்றலும், தமிழ்த் தேசிய உணர்வும், தீர்க்கதரிசன சிந்தனையும், சரவதேசத்தைக் கையாளும் மதிநுட்பமும் வாய்ந்த ஒரு தலைவர்தான் இன்று தமிழர்களுக்குத் தேவை.

# விமானத்தில் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

## இந்தியப் பிரஜை ஒருவர் கைது

விமானத்தில் வைத்து இலங்கையைச் சேர்ந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றம்சாட்டப்பட்ட இந்தியப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 49 வயதுடைய இந்தியப் பிரஜையாவார்.

பாதிக்கப்பட்ட சிறுமி இலங்கையை சேர்ந்த 8 வயதுடையவராவார்.

நேற்றுப் புதன்கிழமை சவுதி அரேபியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் விமானபணியாளர்களிடம்விடுத்தமுறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குறித்த விமானத்திலிருந்து கட்டுநாயக்கவை வந்தடைந்து மீண்டும் இந்தியாவை நோக்கி புறப்படவிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி பரிசோதனைக்காக விமான நிலைய பொலிஸாரால் நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# யுத்தம் இல்லாத நாட்டில் பாதுகாப்புக்கு ஏன் பெருந்தொகைப் பணம் ஒதுக்கீடு?

## சபையில் சிறிதரன் எம்.பி. கேள்வி



"யுத்தம் இல்லாத, 15 ஆண்டுகளாகக் குண்டுச் சத்தம் கேட்காத நாட்டில் தொடர்ந்தும் பல பில்லியன் ரூபா பணத்தைப் பாதுகாப்புக்காக ஒதுக்கி வைத்திருந்தால் நாட்டினுடைய பொருளாதாரம் எவ்வாறு வளரும்?" – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்ட விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மிக முக்கியமாக இம்முறை கொண்டு வரப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தினூடாகப் பல விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன.

சென்ற வருடமும் வரவு – செலவுத் திட்டத்தினூடாகத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கிடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், இது அறிக்கையாகவே நாடாளுமன்றத்தில் இருக்கின்றது.

மொத்த வரவு – செலவுத் திட்டத்தில் 15.2 வீதமான பகுதி பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இப்போது யுத்தம் இல்லை. எங்கேயும் குண்டுச் சத்தம் இல்லை. யாரும் துப்பாக்கி தூக்கியதாகத் தெரியவில்லை.

இந்த நாட்டில் படைகளைக் குவித்து இராணுவ வலயமாக வடக்கு – கிழக்கை வைத்துக் கொண்டு இவ்வளவு நிதியையும் திரும்ப ஒதுக்கீடு செய்வதென்றால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சியடைய முடியும்?" – என்றார்.

# 'இமயமலைப் பிரகடனம்' மஹிந்தவிடம் கையளிப்பு





முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவை உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் சிறந்த இலங்கைக்கான சங்க ஒன்றியத்தின் தேரர்கள் ஆகியோர் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இதன்போது இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கான இமயமலைப் பிரகடனத்தை மஹிந்தவிடம் அவர்கள் கையளித்துள்ளனர்.

அத்துடன் தமது வேலைத்திட்டம் தொடர்பிலும் மஹிந்தவுக்கு அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

# சத்தீஸ்கர் மாநிலத்தின் முதல்வராக விஷ்ணு தியோ சாய் பதவியேற்றார்




சத்தீஸ்கர் முதல்வராக விஷ்ணு தியோ சாய் நேற்று பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் பிஸ்வபூஷன் ஹரிசந்தன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மத்தியப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றதை அடுத்து, கட்சியின் சட்டப்பேரவைத் தலைவராக விஷ்ணு தியோ சாய் கடந்த ஞாயிற்றுக் கிழமை தேர்வு செய்யப்பட்டார்.

இதையடுத்து, தலைநகர் ராய்ப்பூரில் உள்ள அறிவியல் கல்லூரி மைதானத்தில் நேற்று பதவி ஏற்பு விழா நடைபெற்றது. இதில், மாநில முதல்வராக விஷ்ணு தியோ சாய் பதவியேற்றுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து துணை முதல் வர்களாக அருண் சாவோ மற்றும் விஜய் ஷர்மா ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். அனைவருக்கும் ஆளுநர் பிஸ்வபூஷன் ஹரிசந்தன் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

பதவியேற்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத், அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மா, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதல்வர் பூபேஷ் பெகல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் குன்குரி தொகுதியில் போட்டியிட்ட விஷ்ணு தியோ சாய் 87 ஆயிரத்து 604 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

கடந்த 2020 முதல் 22 வரை சத்தீஸ்கர் மாநில பா.ஜ.க. தலைவராக இருந்த இவர், நரேந்திர மோடி அமைச்சரவையில் சுரங்கம், இரும்பு துறைகளின் இணை அமைச்சராக இருந்துள்ளார்.

1999 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை 4 முறை ராய்கர் தொகுதியில் இருந்து மக்களவைக்கு தேர்வானவர். பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்.

# ராஜஸ்தான் மாநிலத்தின் முதல்வராக பஜன்லால் சர்மா நாளை பதவியேற்பு



ராஜஸ்தான் முதல்வராக தேர்வு செய்யப்பட்டுள்ள பஜன்லால் சர்மா நாளை பதவியேற்க உள்ளார் என மாநில பா.ஜ.க. தலைவர் சி.பி.ஜோஷி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 200 தொகுதிகளில் வேட்பாளர் ஒருவரின் மறைவை அடுத்து 199 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது.

இதில், பா.ஜ.க. 115 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் 69 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. அறுதிப் பெரும்பான்மையுடன் பா.ஜ.க. வெற்றி பெற்றதை அடுத்து, கட்சியின் சட்டப் பேரவைத் தலைவரை, அதாவது முதல் வரை தேர்வு செய்யும் கூட்டம் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் முதல்வராக பஜன்லால் சர்மா தேர்வு செய்யப்பட்டார். துணை முதல்வர்களாக தியா குமாரி மற்றும் பிரேம் சந்த் பைரவா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், முன்னாள் அமைச்சர் வாசுதேவ் தேவ்நானி சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதையடுத்து நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சி.பி. ஜோஷி, "பஜன்லால் ஷர்மா முதல்வராகவும், தியா குமாரி மற்றும் பிரேம் சந்த் பைரவா ஆகியோர் துணை முதல்வர்களாகவும் நாளை பதவியேற்க உள்ளனர். ஜெய்ப்பூரின் ராம்நிவாஸ் பாக்கில் உள்ள ஆல்பர்ட் ஹாலில் பதவியேற்பு விழா நடைபெறும்" என தெரிவித்தார்.

பதவியேற்பு விழாவில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது.

# நாடாளுமன்றத்துக்கு அச்சுறுத்தல்: தமிழக முதல்வர் ஸ்டாலின் கவலை

"மக்களவைக்குள்ளேயே அரங்கேறியுள்ள பாதுகாப்பு மீறல், நமது மக்களாட்சியின் உயரிய கோயிலான நாடாளுமன்றத்துக்கும் பெரும் அச்சுறுத்தலை உண்டாக்கியிருக்கிறது" என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில்,

"முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடாளுமன்ற மக்களவைக்குள்ளேயே அரங்கேறியுள்ள பாதுகாப்பு மீறல், நமது மக்களாட்சியின் உயரிய கோயிலான நாடாளுமன்றத்துக்கும் பெரும் அச்சுறுத்தலை உண்டாக்கியிருக்கிறது.

இதில் தாமதமில்லாத உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உரிய விசாரணை மேற்கொண்டு, இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறிந்து, இனி இப்படி நடக்காத அளவுக்குப் பாதுகாப்பு நடைமுறைகளைச் செயல்படுத்தி, மக்களாட்சியின் மிக முக்கியமான அமைப்பான நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை நம்மிடம் உள்ள அனைத்து வலிமையையும் கொண்டு உறுதிசெய்திட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஹமாஸ் அமைப்பினரால் 12 தடவைகள் சுடப்பட்டேன்!

## - இஸ்ரேல் பெண் இராணுவ அதிகாரி தகவல்




பாலஸ்தீனத்தின் காசா மீது இரண்டு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், ஹமாஸின் தாக்குதலில் காயமடைந்த இஸ்ரேலிய பெண் இராணுவ அதிகாரி ஈடன் ராம் தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார்.

"ஒக்டோபர் 7 ஆம் திகதி சனிக்கிழமை. ஹமாஸ் அமைப்பினர் எங்கள் இராணுவத் தளத்தை நெருங்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். என்னுடைய காலில் குண்டு இறங்கியது. காலில் குண்டுடன், நான் அந்த இடத்திலிருந்து நகர்ந்து, அருகில் இருந்த அறைக்குச் சென்றேன்.

அந்த அறையில் என்னோடு சேர்த்து ஏழு அதிகாரிகள் இருந்தோம். எங்கள் அறையை ஹமாஸ் குழுவினர் சுற்றி வளைத்து துப்பாக்கிச் சூடு நடத்தினர். குண்டுகள் எங்களைத் துளைத்தன. நான் ரத்த வெள்ளத்தில் சரிந்து கிடந்தேன். என் அருகே என் சக அதிகாரிகள் குண்டடிபட்டு விழுந்து கிடந்தனர். அறையெங்கும் ரத்தம். நான் உயிரோடு இருக்கிறேனா அல்லது இறந்துவிட்டேனா என்பதை என்னால் உணர முடியவில்லை. உண்மையில், அப்போது நான் இறந்துகொண்டிருந்தேன்.

இறுதிகுண்டுக்காக காத்துக்கொண்டிருந்தேன். என் சக அதிகாரிகள் எத்தனை பேர் இறந்துவிட்டனர் என்று தெரியவில்லை. தீவிரவாதிகள் ஒவ்வொரு உடலாக சோதித்துக்கொண்டிருந்தனர். நான்கு மணி நேரம் நான் அப்படியே உறைந்து கிடந்தேன்.

தீவிரவாதிகள் அறையை விட்டு வெளியேறினர். திடீரென்று என் அருகே என் தோழியும் சக அதிகாரியுமான சாஹரின் மூச்சுக்காற்றை உணர்ந்தேன். அந்த தாக்குதலில் அவர் உயிர் தப்பி இருந்தார். அவர் தன்னுடைய சீருடையை கழற்றி எனக்கு முதலுதவி செய்தார். நான் என் உடலில், எங்கெல்லாம் அடிபட்டு இருக்கிறது, எங்கிருந்து ரத்தம் வருகிறது என்று ஒவ்வொரு பகுதியாக தொட்டுப்பார்க்க ஆரம்பித்தேன். என் உடல் என் வசம் இல்லாததுபோல் உணர்ந்தேன். பேச்சு எழவில்லை. என்னை அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.

12 முறை சுடப்பட்ட நான் இன்று உயிரோடு இருப்பது ஒரு அதிசயம்தான்" என்று தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் 48 மணி நேரத்துக்கு அவருக்கு மிகத் தீவிர அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது அவர் உடல்நலம் தேறியுள்ளார். அவரது இராணுவ சேவையை கௌரவிக்கும் விதமாக கடந்த வாரம் இஸ்ரேல் அரசு அவருக்கு விருது வழங்கியது.

# உக்ரைனுக்கு மேலதிகமான உதவிகளை வழங்குங்கள்: ஜனாதிபதி ஜெலென்ஸ்கி அமெரிக்காவிடம் கோரிக்கை







உக்ரைனுக்கு மேலதிக உதவிகளை வழங்குமாறு அந்த நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் வொஷிங்டனில் தலைவர்கள் பலரைச் சந்தித்துள்ளார்.

61 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதி முயற்சிகளை அவர் இந்த சந்திப்புகளின் போது மேற்கொள்கிறார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை வெள்ளை மாளிகையில் உக்ரேன் ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

இதன்போது, மேலதிக உதவிகளை வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருப்பினும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடைய தவறான செயற்பாடுகளை காரணங்காட்டி அமெரிக்க காங்கிரஸை சமரசப்படுத்தினாலேயே இந்த உதவித் தொகையைப் பெற முடியுமென ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.



# ‘இமயமலைப் பிரகடனம்’ குறித்து எம்.பிக்களுக்கும் தெளிவுபடுத்தல்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள உலக தமிழர் பேரவை மற்றும் இலங்கையில் இருக்கின்ற சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பினர் ஆகியோர் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக கட்சி தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து ‘இமயமலைப் பிரகடனத்தை’ கையளித்து வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தப் பிரகடனம் தொடர்பாக உலக தமிழர் பேரவையினரும், சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பினரும் இணைந்து செய்கின்ற இந்த முயற்சி தொடர்பாகத் தெளிவுபடுத்துகின்ற கூட்டம் ஒன்று நேற்று சபாநாயகரின் அழைப்புக்கு அமைய அவரின் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது இடம்பெற்ற சில பதிவுகளை படங்களில் காணலாம்.


















# விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்குத் தீர்மானம்

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**
யாழ்ப்பாணம், டிச.14

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விவரங்களை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் விமானப் படையின் தளபதி ஏயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ்ச் தெளிவு படுத்தினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில், இலங்கை விமானப்படையின் தளபதி உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் ஆளுநரை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர், விமானப்படையின் தளபதி, ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் நிரான் மல்லவராச்சி, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், தொல்பொருளியல் திணைக்களத்தின் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பிராந்திய அலுவலகத்தின் அதிகாரிகள், இலங்கை விமானப்படையின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்.

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்குரிய திட்டங்கள், அதற்கு தேவையான வளப் பகிர்வு, விமானப்படையினால் ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள், இசைநிகழ்ச்சி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிகழ்வை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்காக எரிவாயு விசையாழி விமான இயந்திரங்களை வழங்கவுள்ளதாகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான கற்றல் உதவிகளை பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் விமானப்படையின் தளபதி தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள 73 பாடசாலைகளை புனரமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு மேலும், 73 ஆயிரம் தமிழ் மற்றும் ஆங்கில மொழி புத்தகங்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, மருத்துவ முகாம், பற்சிகிச்சை முகாம், கண் சிகிச்சை முகாம், இலவச கண்ணாடிகளை வழங்குதல், இரத்ததான முகாம் நடத்துதல், 73 ஆயிரம் மரக்கன்றுகளை பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் –

சைக்கிள் ஓட்டப்போட்டி, கல்விக் கண்காட்சி, மாலை நேர இசைநிகழ்ச்சி என்பவற்றை நடாத்த எதிர்பார்ப்பதாகவும் – விமானப்படையின் தளபதி தெரிவித்துள்ளார்.

விடயங்களை கேட்டறிந்த வடக்கு மாகாண ஆளுநர் பின்வரும் விடயங்களைத் தெரிவித்தார். இன நல்லிணக்கத்திற்கும், ஒற்றுமைக்கும் இந்தச் செயற்பாடுகள் வழிவகுக்கும். பாடசாலைகளின் புனரமைப்பின் போது கழிவறை மற்றும் குடிதண்ணீர் வசதி தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழிற்துறைசார் பயிற்சிகளை வழங்கவும் நடவடிக்கை எடுப்பதோடு முப்படைகளின் செயற்பாடுகள், படைத்தளங்கள் குறித்து கல்வி சுற்றுலாக்கள் ஊடாக மாணவர்களை தெளிவுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தோடு

விமானப்படையின் 73 ஆவது ஆண்டு பூர்த்தியை வடக்கு மாகாணத்தில் கொண்டாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகவும் கூறினார்.





# விவசாய மேன்மை விருது வழங்கல் நிகழ்வு முல்லைத்தீவு செயலகத்தில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.14

முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் முல்லைத்தீவு விவசாய திணைக்களமும் இணைந்து நடாத்திய விவசாய மேன்மை விருது வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு.ம.ஜெகூ பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி.ச.செந்தில்குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தார்கள்.

விவசாய மேன்மை விருது வழங்கல் மற்றும் கண்காட்சி நிகழ்வானது முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயத்துறையை மேலும் முன்னேற்றும் வகையில் விவசாயம் மற்றும் உணவுத் துறையை முன்னோக்கி நகர்த்தும் சிறந்த முயற்சியாளர்களை அங்கீகரித்து ஊக்குவித்தல், விவசாயம் உணவுத் துறையின் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற குறிக்கோள்களை மையமாக கொண்டு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த சிறந்த பயிர்ச் செய்கையாளர்கள், சிறந்த கால்நடை வளப்பாளர்களை தேர்ந்தெடுத்து விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் “நவீன விவசாயம்” எனும் தொனிப் பொருளில் கலாநிதி எஸ்.ஜெ.அரசகேசரியின் சிறப்புரையும் இடம்பெற்றது. முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் சி.குணபாலன், மாவட்டத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் க. லிங்கேஸ்வரன், பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், சமுர்த்தி பணிப்பாளர் மு.முபராக், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.க. ஜெயபவானி, விவசாயத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி. யாமினி மற்றும் பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.















# சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி யாழ் பிராந்திய செயலகத்தில் நேற்று நிகழ்வு

2023 ஆம் ஆண்டிற்கான சர்வ தேச மனித உரிமைகள் தின நிகழ் வினை சிறப்பிக்கும் முகமாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரி யாலயம் 'கௌரவம், சுதந்திரம், எல்லோருக்கும் நீதி' எனும் தொனிப் பொருளில் நிகழ்வு ஒன்றை நடாத்தி யது.

இந்நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் உள்ள கலைத்தூது அழகியல் கல்லூ ரியில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள மனித உரிமை பாதுகாவலர்களுக்கான வழிகாட்டல்கள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் இளம் பெண் மர்ம மரணம் உடற்கூறுகள் சோதனைக்குக் கொழும்புக்கு




யாழ்ப்பாணத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில், அவரின் உடற்கூறுகள் சோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

உடுவில் – கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சண்முக நாதன் துசீந்தினி (வயது 26) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

இவருக்குத் திருமணம் ஆகி ஒரு வருடமே ஆவதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. பெண்ணின் கணவர் வெளி நாட்டில் வசித்து வருகிறார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணுக்கு கடந்த 11ஆம் திகதி உடல் சுகயீனம் ஏற்பட்டது. இதன்போது அவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனையடுத்து மேலதிக சிகிச் சைக்காக அவர் நேற்றையதினம் யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே, அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைதிடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் முன்னெடுத்திருந்தார்.

மரணத்திற்கான காரணம் தெரிய வராத நிலையில் அவரது உடற் கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசா லைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# அரசுக்கு வெள்ளையடிக்கும் செயற்பாட்டையே உலகத் தமிழர் பேரவை முன்னெடுக்கின்றதாம்!

## சீறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தமிழர் தாயகப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகளும், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மையமாகக்கொண்டு உலகத்தமிழர் பேரவையினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சியை அரசாங்கத்துக்கு "வெள்ளையடிக்கும்" செயற்பாடாகவே தாம் கருதுகிறார் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் இதுவரை காணாத பாரிய சரிவொன்றைச் சந்திக்கநேரும் என்பதால் தமது வாக்கு வங்கியைப் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை, தமது உதிரிகளான உலகத்தமிழர் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அங்கீகாரத்தை வழங்கும் மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபட்டிருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒவ்வொரு தனிநபரும் சமாதானமாகவும், கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், எவ்வித பயமும் சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஓர் இலங்கை உருவாக்கப்படவேண்டும்என்றதொனிப் பொருளை மையப்படுத்திய 'இமய–மலை' பிரகடனம் உலகத்தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன் சுரேந்திரனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டது.

அப்பிரகடனத்தை முற்றாக நிராகரித்தும், உலகத்தமிழர் பேரவையின் செயற்பாட்டைக் கண்டித்தும், இவ்விடயத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியும் நேற்றுப் புதன்கிழமை கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

பௌத்த தேரர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் நேபாளத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, கடந்த ஏப்ரல் 27 இல் கைச்சாத்திடப்பட்ட 6 அம்சங்களை உள்ளடக்கிய 'இமய மலை" பிரகடனத்தைக் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ள உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள், அதுகுறித்து இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்து அப்பிரகடனத்துக்கு அங்கீகாரம் கோரியுள்ளனர்.

முதன்முதலாக உலகத்தமிழர் பேரவை உருவாக்கப்பட்டபோது, அது பல்வேறு அமைப்புக்களையும் உள்ளடக்கியதோர் குடை அமைப்பாகவே காணப்பட்டது. அதன்படி அவ்வமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் அங்கம்வகித்த (பின்னர் அதிலிருந்து விலகிய) பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து இப்பிரகடனத்தைக் கண்டித்தும், விமர்சித்தும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக உலகத்தமிழர் பேரவையானது புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகத் தம்மைக் காண்பித்துக் கொள்வது தவறு எனவும் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் உலகத்தமிழர் பேரவையின் ஊடகப் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் எம்மைச் சந்தித்து இதுகுறித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதி கோரியிருந்தார். இருப்பினும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு அக்கோரிக்கையை அடியோடு நிராகரித்ததுடன், அதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி அவருக்குரிய பதிலும் அனுப்பிவைக்கப்பட்டது.

மாவீரர் நாளில் தமது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு ஒன்றுகூடியவர்களுக்கு எதிராகத் தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பிரயோகிக்கின்றது. வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களுக்கு எதிரான திட்டமிட்ட இனவழிப்பு அரங்கேற்றப்பட்டுவருகின்றது.

இவ்வாறு அடக்குமுறைகள் மேலோங்கியுள்ள சூழ்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவை மையப்படுத்தி உலகத்தமிழர் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இம்முயற்சியை அரசாங்கத்துக்கு வெள்ளையடிக்கும் செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அதுமாத்திரமன்றி முன்னைய காலங்களில் தமிழர்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்பட்டு வந்த உலகத்தமிழர் பேரவை, இன்னமும் அதிலிருந்து மாறவில்லை என்பதையும் இந்நகர்வு வெளிப்படுத்துகின்றது.

உலகத் தமிழர் பேரவையின் இந்த நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், குறிப்பாக இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் அங்கீகரித்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. கடந்த காலங்களிலும் கூட்டமைப்பு உலகத்தமிழர் பேரவையுடன் மிகநெருங்கிய உறவைப் பேணிவந்திருப்பதுடன், கூட்டமைப்பிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியாத அதன் தொடர்ச்சியாகவே பேரவை இயங்கிவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் கடந்த காலங்களில் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருந்தன. அதன் விளைவாகவே கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்குவங்கி வெகுவாகச் சரிவடைந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)



# யாழ்ப்பாணத்தில் கன மழை பெய்யும்

சீரற்ற காலநிலை தொடர்பில் வட மாகாணத்திற்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வளிமண்டல குழப்பம் காரண–மாக இன்று முதல் அடுத்த சில நாள்களுக்கு வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, தென் மாகாணங்களிலும் நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் சனிக்கிழமை நாள்களில் கடுமையான மழை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரத்தில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அதிக மழைபெய்யக் கூடும் என்பதால் மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் சிகிச்சை பலனின்றி மரணம்

## நெல்லியடிப் பகுதியில் சம்பவம்

மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் வதிரி, கரவெட்டி – நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த நேசராசா அன்ரன் (வயது 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு:–

கடந்த 9ஆம் திகதி இந்த நபரின் குடும்பத்தவர்கள் கோண்டாவில் உள்ள உறவினர்களின் வீட்டிற்கு கொண்டாட்டம் ஒன்றிற்கு சென்றிருந்த நிலையில் அவர் தனியாக வீட்டில் இருந்துள்ளார்.

இதன்போது மதுபோதையில் வந்த உயிரிழந்த நபரின் அக்காவின் மகன் (மருமகன்) அவரைத் தாக்கியுள்ளார்.

இந்த விடயத்தை அறிந்த அயலவர்கள் அவரை மீட்டு மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

மேலதிக சிகிச்சைக்காக அவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்றையதினமே மாற்றப்பட்டார்.

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரிழந்தார்.

தாக்குதலை மேற்கொண்டவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மந்திகை பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**அரசுக்கு வெள்ளையடிக்கும்...**

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே எதிர்வரும் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில், அதில் இதுவரை காணாத பாரிய சரிவொன்றைச் சந்திக்கநேரும் என்பதால் கூட்டமைப்பு 'நல்ல பிள்ளையாக' செயற்பட முயற்சிக்கின்றது.

அதன்படி தமது வாக்குவங்கியைப் பாதுகாத்துக்கொள்ளும் அதே வேளை, தமது உதிரிகளான உலகத் தமிழர் பேரவையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்க்ரமசிங்கவுக்கு அங்கீகாரத்தை வழங்கும் மறைமுக நடவடிக்கையில் கூட்டமைப்பு ஈடுபடுகின்றது.

'இமயமலை' பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 6 அம்சங்களும் வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்கோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினருக்கோ அல்லது அண்மையில் தமது அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்தமைக்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக்கோ எவ்வகையிலும் பயனளிக்காது.

மாறாக அவை தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட விதத்தில் இடம்பெற்றுவரும் இனவழிப்பை மூடிமறைத்து, அதனை நேர்மறையான விதத்தில் காண்பிப்பதற்கும், தற்போதைய அரசமைப்பில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவதன் ஊடாக தமிழ்மக்களுக்குப் போலியான நம்பிக்கையைக் கொடுப்பதற்கும், பொறுப்புக்கூறலுக்கு முற்றுப்புள்ளி வைத்து போலியான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பதற்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான அங்கீகாரத்தை வழங்குவதற்குமே பங்களிப்புச்செய்யும்.

எனவே இதனை முற்றாக நிராகரிக்கவேண்டுமெனவும், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்க நேரும் என்ற பாடத்தை அவர்களுக்குப் புகட்டவேண்டும் எனவும் தமிழ் மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.



# ஒரு கோடி ரூபா பொருள்களை சட்ட விரோதமாக கொண்டு வந்த இருவர் கட்டுநாயக்காவில் கைது!

சட்டவிரோதமான முறையில் அனுமதியின்றி கொண்டுவரப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருள்களுடன் இரு வர்த்தகர்கள் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, கொழும்பு தெஹிவளை பிரதேசங்களைச் சேர்ந்த 40 மற்றும் 43 வயதுடையவர்களாவர். இவர்கள் துபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் விமான நிலைய சோதனைகளைத் தவிர்த்துவிட்டு, பொருள்களை பயணப்பையிற்குள் வைக்காமல் விமான நிலைய பொதி சுமை வண்டியில் ஏற்றி விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்படும் போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் 17 மடிக்கணினிகள், 47 கையடக்கத் தொலைபேசிகள், ஒரு லீற்றர் அளவுடைய 22 விஸ்கி மதுபான போத்தல்கள், 3 ஒலி உபகரணங்கள் , 200 கையடக்க தொலைபேசி சார்ஜர்கள், 3 மைக்ரோ போன்கள், 8 கமராக்கள் , 55 கையடக்கத் தொலைபேசி பாகங்கள் மற்றும் 39 கையடக்கத் தொலைபேசி பட்டரிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# சொத்துச் சேர்த்த விடயம் தொடர்பான வழக்கில் வீரவன்ஸவின் பூர்வாங்க ஆட்சேபனை நிராகரிப்பு



அமைச்சராகப் பதவி வகித்த போது, ஏழரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துகள் மற்றும் பணத்தைச் சம்பாதித்த விதத்தை வெளியிட தவறினார் என்ற குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக இலஞ்ச ஆணைக்குழு தொடர்ந்துள்ள வழக்கை விசாரிக்க முடியாது என அவரது சட்டத்தரணி முன்வைத்த அடிப்படை எதிர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

இதனடிப்படையில் இந்த வழக்கை முழுமையாக விசாரிக்க எதிர்வரும் ஜனவரி 29 ஆம் திகதி அதனை விசாரணைக்கு எடுக்குமாறு நீதிபதி நவரத்ன மாரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இலஞ்ச ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு இலஞ்ச சட்டத்தின் கீழ் தொடரப்பட்டுள்ளதால் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது எனவும், இதனால், குற்றப்பத்திரிகையைத் தள்ளுபடி செய்து, தனது தரப்பு வாதியை விடுதலை செய்யுமாறும் கோரி வீரவன்ஸ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஷவிந்திர பெர்னாண்டோ அடிப்படை எதிர்ப்பை தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து தனது முடிவை அறிவித்த நீதிபதி, எதிர்ப்பு வாதங்களை நிராகரிப்பதாகவும் வழக்கை விசாரணைக்கு எடுக்கும் திகதியை அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி மற்றும் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்தில் அமைச்சராக பதவி வகித்த வீரவன்ஸ் ஏழரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் மற்றும் பணத்தை சம்பாதித்த விதத்தை வெளியிட தவறினார் எனத் தெரிவித்து குற்றம் சுமத்தி, இலஞ்ச ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது.



# 60 லட்சம் இறக்குமதி முட்டைகளை சந்தைக்கு விநியோகிக்கத் தீர்மானம்

இறக்குமதி செய்யப்பட்டு, களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள 60 லட்சம் முட்டைகள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன என அரச வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சதொச விற்பனை நிலையங்களினூடாக அவை விற்பனை செய்யப்படவுள்ளன என கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

சந்தையில் முட்டையின் விலை அதிகரித்துள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் துறைசார் அமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



# மின் தடை பற்றிய விடயங்களை முன்வைக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தல்

நாடு முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டமை தொடர்பிலான விடயங்களை முன்வைக்குமாறு மின்சார சபைக்கு அறிவித்துள்ளதாக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் மின் விநியோகம் தடைப்பட்ட சந்தர்ப்பங்களில், ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் தெளிவுபடுத்துமாறும் கோரியுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதி மின்சார சபையின் அதிகாரிகள், பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பான யோசனையை எதிர்வரும் ஜனவரி மாதம் வழங்குமாறு மின்சார சபைக்கு அறிவித்துள்ளதாக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## திடீர் மின் விநியோக தடையால் பாதிப்பு:

# இரண்டு எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் தேசிய வைத்தியசாலையில் ‘அவுட்’!

கடந்த சனிக்கிழமை மின் விநியோகம் திடீரென தடைப்பட்டதால், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இரண்டு எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் செயலிழந்துள்ளன என நிறைவுகாண் மருத்துவ ஊழியர்களின் கூட்டு ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக அதன் செயலாளர் சானக்க தர்மவிக்ரம குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தற்போது இரண்டு எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் மாத்திரமே செயற்பாட்டு நிலையிலுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.12.2023




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவதற்கு சாதகமான நாள். அது உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். வளர்ச்சியை அளிக்கும். இன்றைய நாளை சிறந்ததாக ஆக்க புதிய வழிகளைக் காண்பீர்கள். உணர்ச்சிவசப்படுவதை தவிர்க்கவும்.

உங்கள் அன்றாட பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. இன்று அதிக பணிகள் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

உங்களிடம் அகந்தைப் போக்கு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் உறவு வலுப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பணப்பற்றாக்குறையை சந்திப்பீர்கள். இதனால் வருத்தமான மனநிலை காணப்படும்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. இன்றைய சவால்களை கையாள அனுசரணையான அணுகுமுறை தேவை. தன்னம்பிகை குறைந்து காணப்படும். அதனை உருவாக்கிக் கொள்ளும் வழி காண வேண்டும்.

கடினமான பணிகள் காணப்படும். அதனால் நேரம் செலவாகும். கவலையை உண்டாக்கும். பணியிடத்தில் சவாலான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் இணக்கமான உறவு காணப்படாது. ஒருவருக்கொருவர் மனம் திறந்து பேசுவதன் மூலம் இன்றைய நாளை இனிமையாக்கலாம்.

இன்று பண வரவு ஏற்படும் அதிர்ஷ்டம் காணப்படாது. பணப்பற்றாக்குறை காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் உடன் பிறந்தோரின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் திட்டங்களை செயலாற்ற நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கையை மேம்படுத்த முயற்சி செய்வீர்கள்.

பணியிடத்தில் நற்பெயர் பெறுவீர்கள். பல வாய்ப்புகள் காணப்படும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்யும் நிலையில் இருப்பீர்கள்.

நீங்கள் சிறந்த மனநிலையில் காணப்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் இருப்பீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அதன் மூலம் நன்மை விளையும்.

இன்று பணியின் மூலம் பல சாதகமான பலன்கள் பெறுவீர்கள். கூடுதல் பணவரவு ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். அதனை நீங்கள் கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை நீங்கள் தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் உங்கள் பணிகளை அமைதியாக மேற்கொள்ள வேண்டியது அவசியம். திட்டமிட்டு அதன்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று உங்கள் அன்றாட செயல்களை கவனமாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சஞ்சலமான உணர்வுகளால் பாதிக்கப் படுவீர்கள். ஆன்மீக நடவடிக்கைகள் அமைதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படாது. கூடுதல் செலவுகள் மற்றும் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் மகிழ்சிகரமாக இருக்காது.




இன்று நம்பிக்கையான, நன்மை தரும் நாள். இன்று பல நன்மைகள் விளையும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளியில் சென்று மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

மூத்தவர்களின் மூலம் பணவரவு பரிசாக கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று உங்கள் இலக்குகளில் சிறந்த வெற்றி காண இயலாது. இன்று நீங்கள் புதிய விஷயங்களை கற்க விரும்புவீர்கள். ஆனால் சில காரணங்களால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் செயல்களில் பொறுமையை கையாளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து உங்கள் துணையிடம் கோப உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும்.

பண வரவிற்கு இது சாதகமான நாள் அல்ல. உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

பதட்டம் காரணமாக நீங்கள் அமைதியின்றி காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.12.2023




உங்கள் திறமைகளை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதால் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திக்காமல் தெளிவான மன நிலையுடன் இருங்கள்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும் வகையில் இருக்கும். அதிக பணிகள் காரணமாக சில பணிகள் நிலுவையில் இருக்கும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான புரிந்துணர்வு பாதிக் கப்படும்.நீங்கள் அமைதியான நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. உங்களின் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாள். எதிர்பாராதவிதமாக நன்மை கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தி யையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். விருந்தினர்களின் திடீர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமையாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணியில் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் உற்சாகமான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரும் மறக்க முடியாத தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் கனிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சில அசௌ கரியங்கள் காணப்படும். விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும்.உங்கள் தந்தையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். ஆன்மீக ஈடுபாடு அமைதியை அளிக்கும்.

உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும். நீங்கள் சிறந்த பலன் பெற இன்று கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிகரமாக நடந்துகொள்வீர்கள். இந்தப் போக்கு உறவின் புரிந் துணர்வை பாதிக்கும்.

உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் பணம் கிடைக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். இன்று நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்கும். பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

உங்கள் தேவைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் பாதுகாப்பாக உணர்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக இன்று ஸ்திரமான முன்னேற்றகரமான ஆரோக்கியம் காணப்படும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean GROUP OF COMPANIES — KELSEY HOMES 40 Years Housing Excellence

+94777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA — No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park